# இயல் 1 தமிழ்விடு தூது

## பொருள் அறிக.

- தித்திக்கும் - இனிக்கும்
- தெள் அமுதாய் – தெளிந்த அமுதாய்
- தெள்ளமுதின் மேலாய் - அமிழ்தினும் மேலான
- முத்திக்கனியே – வீடுபேறு தரும் கனியே
- என் முத்தமிழே - இயல், இசை, நாடகம் என்ற என் தமிழே
- புத்திக்குள் - அறிவுக்குள்
- உரைக்கும் – சொல்லும்
- உண்டு - இருக்கிறது
- மண்ணில் - இந்த பூமியில்
- கொள்வார் படைப்பார்கள்
- உறவு என்று – உறவு என்பது
- உண்டோ? - இருக்கிறதோ?
- சிந்து – இசைப்பாடல்களுள் ஒருவகைப் பா
- நா – நாக்கு
- சிந்துமே - இற்று விழுமே
- பத்துகுணம் - பத்து வகையானகுணங்கள்
- பெற்றாய் -:பெற்றுள்ளாய்
- நவரசம் - ஒன்பது சுவை
- அழியா வனப்பு - அழியாத அழகு

## பிரித்து எழுதுக

- முத்தமிழ் = மூன்று + தமிழ்
- முத்திக்கனி = முத்தி + கனி
- அந்திரமேல் = அந்திரம் + மேல்
- முக்குணம் = மூன்று + குணம்
- மற்றொருவர் = மற்று + ஒருவர்
- நாக்குலவும் = நாக்கு + உலவும்
- ஊனரசம் = ஊன்+ரசம்

## இலக்கணக் குறிப்பு

- முத்திக்கனி = உருவகம்
- தெள்ளமுது = பண்புத்தொகை
- குற்றமிலா = ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நா = ஓரெழுத்து ஒருமொழி
- செவிகள் உணவான = நான்காம் வேற்றுமைத்தொகை,
- சிந்தாமணி, அழியா, ஒழியா = ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நா = ஓரெழுத்து ஒருமொழி
- முத்தமிழே! = விளித்தொடர்

## விரித்து எழுதுக.

- முத்தமிழ் = இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்
- மூவினம் = துறை, தாழிசை, விருத்தம்
- முக்குணம் = சத்துவம், இராசசம், தாமசம்
- பத்துக் குணம் = செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், காந்தம், வலி, உய்த்தலில் பொருண்மை,சமாதி,
- ஐந்து வண்ணம் = வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை,
- அறுசுவை = இனிப்பு, கசப்பு, புளிப்பு, உறைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு.
- நவரசம் = வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை
- வனப்பு = அம்மை, அழகு, தொன்மை, தோல் விருந்து, இயைபு, புலன், இழைபு